நிதித்துறையில்
நாணயம் மிக்க நண்பன்
ஷப்றா
207, மின்சார நிலைய வீதி
யாழ்ப்பாணம்.

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

YOUR FRIENDS IN FINANCE
SHABRA
2, R. A. De Mel Mawatte,
COLOMBO - 4.
Telephone:- 508087—90

மலர்: 6 திருவள்ளுவர் ஆண்டு 2022 புரட்டாதி 17 வியாழக்கிழமை (03-10-1991) UTHAYAN — A Lively National Tamil Daily இதழ்: 303

## நடுநிசி வேளையில் சம்பவம்:

# அரச கடற்படைப் படகு தீவக கடலில் மூழ்கடிப்பு!

## ஐந்து படையினர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், அக்டோபர் 3

தீவகக் கடற் பகுதியில் நேற்று முன்தினமிரவு கடற்புலிகள் நடத்திய தீவிர தாக்குதலில் ஸ்ரீலங்கா கடற்படையினருக்குச் சொந்தமான - 40 அடி நீளமுள்ள - அதிவேகப் படகு ஒன்று மூழ்கடிக்கப்பட்டது, படகிலிருந்த கடற்படையினர் ஐந்து பேர் உயிரிழந்தனர். படகு மூழ்கிக்கொண்டிருந்த வேளை அதிலிருந்த ஆயுதங்களைப் புலிகள் கைப்பற்றினர்.

நயினாதீவு கடற்படை முகாமிலிருந்து காரைநகர் கடற்படை தளத்திற்குச் சென்று கொண்டிருந்த இரு அதிவேகப் படகுகளில் ஒன்றைய கடற்புலிகள் வழிமறித்துத் தாக்கி மூழ்கடித்தனர் என்று விடுதலைப் புலிகளின் வட்டாரங்கள் தெரிவித்தன.

மற்றைய படகு தப்பிச் சென்றதாகவும் தெரிவிக்கப்பட்டது.

மூழ்கடிக்கப்பட்ட படகில் இருந்து ஏ. கே. எல். எம். ஜி. ரகத் துப்பாக்கி — ஒன்று, றம் மாசின் — ஒன்றும், நடுத்தர ரகரவைகள் 92 — என்பன புலிகளால் கைப்பற்றப்பட்டன.

இதேவேளை —

வடபகுதிக் கடற் பகுதியில் (3 ஆம் பக்கம் பார்க்க)

## புங்குடுதீவை நோக்கி சரமாரியான ஷெல் வீச்சு!

புங்குடுதீவு, அக். 3

புங்குடுதீவை நோக்கியும் வேலணை, சரவணை ஆகிய பகுதிகளை நோக்கியும் நேற்றுமுன்தினம் செவ்வாய் இரவு சரமாரியாக ஷெல் வீச்சுக்கள் நடத்தப்பட்டன.

நயினாதீவு கடற்படை முகாமில் இருந்தே புங்குடுதீவை நோக்கி ஷெல்கள் ஏவப்பட்டன. மற்றும் வேலணை, சரவணை ஆகிய இடங்களில் விழுந்த ஷெல்கள் ஊர்காவற்றுறை, புளியங் கூடல் பகுதிகளில் நிலை கொண்டிருக்கும் படையினரால் ஏவப்பட்டன என்று தெரிவிக்கப்படுகிறது.

சுமார் மூன்று மணிநேரம் நீடித்த இந்த ஷெல் தாக்குதல் காரணமாக தீவுப் பகுதிகளில் நூற்றுக்கணக்கான மக்கள் இரவோடிரவாக இடம்பெயர்ந்தனர்.

புங்குடுதீவில் மட்டும் சுமார் 50 ஷெல்கள் வரை விழுந்தன என்று தெரிவிக்கும் [3 ஆம் பக்கம் பார்க்க]

## பொன்னாலைப் பகுதியில் செவ்வாயன்று ஹெலி சூடு!

### இரவில் அடுத்தடுத்து ஷெல் வீச்சு!!

சுழிபுரம், அக். 3

பொன்னாலைப் பகுதியில் நேற்று முன்தினம் [செவ்வாய்] மாலை 6 மணியளவில் ஹெலி ஒன்று கண்மூடித்தனமாக வேட்டுக்களைத் தீர்த்தது.

பொன்னாலைச் சந்தி தொடக்கம் வரதராஜப்பெருமாள் கோவிலடிப் பகுதிவரை தாக்குதல் நடத்தப்பட்டது.

இதேசமயம் இரவு 11 மணிக்குப் பின்னர் காரைநகர் படையினர் பொன்னாலை, மூளாய்ப் பகுதிகளை நோக்கி தொடர்ச்சியாக கடும் ஷெல் தாக்குதல்களை நடத்தினர். [3 ஆம் பக்கம் பார்க்க]

## நெடுந்தீவுப் பயணிகள் நேற்றுத் தடுத்து வைப்பு

யாழ்ப்பாணம், அக். 3

நெடுந்தீவில் இருந்து நேற்று படகில் வந்த பயணிகள் அனைவரும் நயினாதீவுக் கடற்படையினரால் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்று தெரியவருகிறது.

சம்பவம் பற்றி அறியவருவதாவது:-

வழமைபோல் படகு நேற்றும் படையினரின் சோதனைக்காக முகாமுக்குச் சென்றது. உடனடியாக படகை நயினாதீவு நாகபூஷணி அம்பாள் ஆலயத் துறைக்குக் கொண்டு செல்லுமாறு படையினர் பணித்தனர். அங்கு படகுபோய்ச் சேர்ந்ததும் பயணிகள் இறக்கப்பட்டனர். படகு மீண்டும் முகாமுக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

பயணிகள் நேற்று மாலை வரை அங்கேயே தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

இதே சமயம் அனலைதீவு, நயினாதீவு படகுச் சேவைகளும் நேற்று இடம்பெறவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது. [ஓ-117]

## சக்தி மிக்க புதிய ரக கடற்கண்ணி தயாரிப்பதில் புலிகள் மும்முரம்!

வடபகுதிக் கடலில் ரோந்தில் ஈடுபடும் கடற்படைப் பீரங்கிப் படகுகளைத் தாக்கி அழிக்க விடுதலைப் புலிகள் புதிய ரக கடற்கண்ணி வெடிகளைத் தயாரித்துப் பயன்படுத்தி வருவதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இந்தப் புதிய ரக கடற் கண்ணியைப் பயன்படுத்தியே விடுதலைப் புலிகள் கடந்த 24 ஆம் திகதி (செவ்வாய்க் கிழமை) காரைநகர்க் கடலில் கடற்படை ரோந்துப் படகு ஒன்றைத் தகர்த்தனர் என்றும் அவ்வட்டாரங்கள் தெரிவித்தன.

கடற்படை பீரங்கிப் படகுகளைத் தகர்க்கக்கூடிய சக்தி வாய்ந்ததாக புதிய ரக கடற்கண்ணி வெடிகள் உள்ளன என்றும் பாதுகாப்பு வட்டாரங்கள் கூறின.

கடற்படையின் கடல் ரோந்து நடவடிக்கைகளை மேலும் சீர்குலைக்கும் வகையில் கூடிய சக்தி வாய்ந்த கடற்கண்ணிகளைத் தயாரிப்பதில் விடுதலைப் புலிகள் மும்முரமாக ஈடுபட்டுள்ளதாக பாதுகாப்பு வட்டாரங்கள் நம்புகின்றன.

— இவ்வாறு ''ஐலண்ட்'' பத்திரிகை செய்தி வெளியிட்டிருக்கிறது (உ-எ)

## 12 சவர்க்காரக் கட்டிகளை எடுத்து வர அனுமதி!

கொழும்பு, அக். 3

வவுனியா தாண்டிக்குளம் பகுதியூடாக வட பகுதி செல்வோர் 12 சவர்க்காரக் கட்டிகளை முன் அனுமதியின்றி எடுத்துச் செல்லலாம் என்று புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சு அறிவித்துள்ளது என்று கொழும்புப் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன.

இனிமேல் 6 சலவைக் கட்டிகளையும், குளிப்பதற்குப் பயன்படுத்தப்படும் 6 சவர்க்காரக் கட்டிகளையும் எடுத்துச் செல்ல முடியும் என்றும் அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)

## இந்திய மீனவர் 21 பேரும் இன்று கொழும்பு புறப்பாடு

யாழ்ப்பாணம், அக். 3

விடுதலைப் புலிகளின் உபசரிப்பில் இருந்து வரும் 21 இந்திய மீனவர்களும் இன்று கப்பல் மூலம் கொழும்புக்கு அழைத்துச் செல்லப்படவுள்ளனர்.

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் யாழ்ப்பாணக் கிளை இதற்கான சகல ஏற்பாடுகளையும் செய்துள்ளது.

21 இந்திய மீனவர்களும் கப்பல் மூலம் திருகோணமலைக்கு அழைத்துச் செல்லப்பட்டு, அங்கிருந்து கொழும்புக்கு வாகனம் மூலம் கூட்டிச் செல்லப்படுவர்.

அங்கு இந்திய தூதரக அதிகாரிகளிடம் அவர்கள் ஒப்படைக்கப்படுவர்.

தூதரக அதிகாரிகள் அவர்களை ஸ்ரீலங்கா அரசின் உதவியுடன் தாயகத்துக்கு அனுப்பி வைப்பர் என்று தெரிவிக்கப்பட்டது. [ஓ-15]

## வடபகுதிக் கடற்படையின் காயமடைந்த தளபதிக்கு பதிலாக புதியவர் நியமனம்

கொழும்பு, அக். 3

வடபகுதிக் கடற்படைத் தளபதியாக கப்டன் இ. இலேரா நியமிக்கப்பட்டுள்ளார்.

ஏற்கனவே தளபதியாக இருந்த கப்டன் எச். ஆர். அமரவீர, கடந்த மாதம் 24 ஆம் திகதி காரைநகர்க் கடற்பகுதியில் வைத்து கடற்படைப் படகு ஒன்று புலிகளால் தகர்க்கப்பட்ட சம்பவத்தில் படுகாயமடைந்தார் என்பது தெரிந்ததே.

தளபதி இலேரா, கப்டன் அமரவீர சுகமடைந்து திரும்பும் வரை கடமை புரிவார் என்று தெரிவிக்கப்பட்டது.

## மட்டு. மாவட்டத்திலும் ஊரடங்கு நீக்கம்

கொழும்பு, அக். 3

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள ஏறாவூர் பற்று உதவி அரசாங்க அதிபர் பிரிவிலும், அம்பாறை மாவட்டத்திலுள்ள திருக்கோவில் பற்று உதவி அரசாங்க அதிபர் பிரிவிலும் நடைமுறையில் இருந்து வந்த ஊரடங்குச் சட்டம் நேற்று காலை 6 மணிக்கு நீக்கப்பட்டது என பாதுகாப்பு அமைச்சின் செயற்பாட்டுத் தலைமையகம் அறிவித்துள்ளது. (த)

## ஈரோஸ் எம். பிக்களின் வருகையால் கொழும்பில் வன்முறை வெடிக்கும்

### அத்துலத் முதலியின் எச்சரிக்கை

கொழும்பு, அக். 3

''ஈரோஸ் எம். பிக்கள் திரும்பவும் நாடாளுமன்றம் வந்திருப்பதை அடுத்து, கொழும்பில் மீண்டும் வன்முறைத் தாக்குதல் வெடிக்கும் ஆபத்து ஏற்பட்டிருக்கிறது''

— இவ்வாறு கூறியிருக்கிறார் முன்னாள் அமைச்சரும், ஐ. தே. க. அதிருப்தியாளர் குழுத் தலைவருமான லலித் அத்துலத் முதலி.

நேற்று செய்தியாளர் மாநாட்டில் வைத்து அவர் [3 ஆம் பக்கம் பார்க்க]

## கூடுதலான பாதுகாப்பை ஈ.பி.ஆர்.எல்.எவ். கேட்கிறது

கொழும்பு, அக். 3

கொழும்பில் தமக்கு கூடுதலான பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும் என்று ஈ. பி. ஆர். எல். எவ். இயக்க எம். பிக்கள் சபாநாயகரைக் கேட்டுள்ளனர்.

ஈரோஸ் எம். பிக்கள் நாடாளுமன்றம் வருவதாலும், அவர்கள் நாடாளுமன்ற விடுதியில் தங்கி இருப்பதாலும் தமக்கு இப்போதுள்ள பாதுகாப்பு அதிகரிக்கப்பட வேண்டியது அவசியம் என்று அந்த இயக்கம் கேட்டுள்ளது.

## முச்சந்தி முரளி



அப்ப...... அக்கரையிலும் ஆடு பிடிச்சிட்டுது என்டு சொல்லுங்கோ......!

## புலிகளுக்கு ஆயுதம் வழங்கியமை:

## நரசிம்மராவ் கண்டனம்

புதுடில்லி, அக். 3

இந்திய அமைதி காக்கும் படை ஸ்ரீலங்காவில் இருந்த சமயம் விடுதலைப் புலிகளுக்கு ஸ்ரீலங்கா அரசு ஆயுதங்கள் வழங்கியதாகக் கூறப்படுவதை இந்தியப் பிரதமர் நரசிம்மராவ் கண்டித்திருக்கிறார்.

இந்தியப் பத்திரிகை ஒன்றுக்கு அளித்த பேட்டியிலேயே அவர் இக் கண்டனத்தை வெளியிட்டதாக ஏஜென்சிச் செய்திகள் தெரிவித்தன.

ஆயுதம் வழங்கிய செயலை தவறான நடவடிக்கை என்று இந்தியா கருதுகிறது என்றார் அவர்.

இந்திய அமைதிப் படைக்கு எதிராகப் போராட விடுதலைப் புலிகளுக்கு ஸ்ரீலங்கா அரசு ஆயுதங்களை வழங்கியது என்ற குற்றச்சாட்டு தொடர்பான பிரச்சினை கிளப்பப்பட்ட பின்னர், அது குறித்து இந்தியப் பிரதமர் இப்போது தான் ஒரு திட்டவட்டமான —பகிரங்கமான— கருத்து வெளியிட்டிருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது. (உ-5)

## ஸ்ரீலங்கா அரசு பதில் கண்டனம்

புலிகளுக்கு ஸ்ரீலங்கா அரசு ஆயுதம் வழங்கியதைக் கண்டித்து இந்தியப் பிரதமர் நரசிம்மராவ் பத்திரிகைகளுக்கு பேட்டி அளித்திருப்பதை அடுத்து —

இந்தியப் பிரதமரின் கூற்றைக் கண்டித்து ஸ்ரீலங்கா வெளிவிவகார அமைச்சு நேற்று அவசர அவசரமாக அறிக்கை ஒன்றை வெளியிட்டிருக்கிறது.

இந்திய அமைதி காக்கும் படையினருக்கு எதிராகவோ அல்லது ஸ்ரீலங்கா இராணுவத்துக்கு எதிராகவோ தாக்குதல் நடத்த விடுதலைப் புலிகளுக்கு ஆயுதம் வழங்கப்பட்டன என்ற குற்றச்சாட்டில் எந்தவித உண்மையும் இல்லை.

இந்தியாவுக்கும் ஸ்ரீலங்காவுக்கும் இடையில் முரண்பாட்டை ஏற்படுத்தும் நோக்குடன் சில குழப்ப சக்திகளால் தீய எண்ணத்துடன் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளே இவை.

இத்தகைய குற்றச்சாட்டுக்களில் எவ்வித உண்மையும் இல்லை.

—இவ்வாறு வெளிவிவகார அமைச்சு அந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது. [இ-உ-5]

## அரசுப் பத்திரிகை பாய்ச்சல்!

கொழும்பு, அக். 3

இந்தியப் பிரதமர் பி. வி. நரசிம்மராவை ஸ்ரீலங்கா அரசுப் பத்திரிகை ''டெய்லி ஒப்சேர்வர்'' கடுமையாகக் குறை கூறியிருக்கிறது.

ஸ்ரீலங்காவின் ஆளும் ஐ. தே. கட்சியின் அதிருப்தியாளர்களுடன் இரகசிய உறவு கொண்டு ஸ்ரீலங்கா அரசின் ஸ்திரத் தன்மையைக் குலைக்க இந்தியா திட்டமிடுவதாகவும் ''டெய்லி ஒப்சேர்வர்'' பத்திரிகை குற்றஞ்சாட்டியிருக்கிறது.

புலிகளுக்கு ஸ்ரீலங்கா அரசு ஆயுதம் வழங்கியது தவறு என இந்தியப் பிரதமர் நரசிம்மராவ் கருத்து வெளியிட்டிருப்பதன் மூலம் ஸ்ரீலங்காவின் எதிர்க் கட்சிகளுடன் இந்தியா கைகோர்த்துக் கொண்டுள்ளது என்பது புலனாகின்றது.

இந்தியா தனது வேலை [3 ஆம் பக்கம் பார்க்க]

## இரகசியமான விடயம் அல்லவாம்!

கொழும்பு, அக். 3

விடுதலைப் புலிகளுக்கு ஆயுதம் வழங்கியது இரகசியமான ஒரு விடயம் அல்ல.

—இவ்வாறு களனியாவில் நடந்த ஐ. தே. க. உறுப்பினர்கள் கூட்டம் ஒன்றில் பேசுகையில் அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

ஜே. வி. பி. நடவடிக்கைகளை விரைவாக அடக்கவும்—

ஸ்ரீலங்கா இராணுவம், தமிழ் தேசிய இராணுவத்தைத் தாக்கும் போது ஏற்படலாம் என்று எதிர்பார்க்கப்பட்ட சிங்கள-தமிழ் கலவரத்தைத் தடுக்கவுமே விடுதலைப் புலிகளுக்கு அரசு ஆயுதங்களை வழங்கியது.

1989 ஆகஸ்ட் மற்றும் செப்டெம்பர் மாதங்களில் தென் பகுதியில் ஜே. வி. பியி [3 ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரம்

### மணப்பெண் தேவை

யாழ். இந்து 33 வயது நட்சத்திரம்: உத்திராடம் M. Sc கிலில் எஞ்ஜினியருக்கு அழகான சைவ மணப்பெண் தேவை. தொடர்பு: சுவாமியார் இராசகுலசிங்கம், 53/5, அன்னசத்திர ஒழுங்கை. சந்நிதானம். 18302,

### திருமண சேவை

இலண்டன், கனடா, ஜேர்மனி. பிரான்ஸ் நாட்டுக் குடியுரிமை பெற்ற மணமகன்களுக்கு தகுந்த மணப்பெண்கள் தேவை. தொடர்பு: கு. திருவிளங்கம், 16/16, வளம்புரம், கொழும்புத்துறை. (18282)

### இலவச திருமண சேவை

30 வயது. கேட்டை 3, பல் டாக்டர் மணமகளுக்கு மணமகன் தேவை. உயர் பதவிப் பெண்ணின் ஜாதகங்களுமுண்டு. சொந்த விலாசம், முத்திரையிடப்பட்ட இரு கடித உறையுடன் தொடர்பு கொள்ளவும். நேரடிச் சந்திப்பு ஞாயிறு காலை மட்டும். து. விமலா, 958/8, கே. கே. எஸ். வீதி, நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம். [4323]

ஜேர்மனியில் தொழில் புரியும் 33 வயது. பூரம் 4, சித்திரை 4, இரு ஆண்களுக்கும், டென்மார்க்கில் தொழில் புரியும் 34 வயது. உத்தரட்டாதி 3, ஆணுக்கும் உடன் மணப்பெண்கள் தேவை. எம்மிடம் தொடர்பு கொள்ள வேண்டிய பிரத்தியேக முறைப்படி தொடர்பு கொள்க. து. விமலா, 958/8. நாச்சிமார் கோவிலடி. யாழ்ப்பாணம். [4324]

### யந்திரம்

நாலூறு. கண்ணூறு. தரித்திரம் நீங்கவும், பதவி உயர்வு, தொழில் விருத்தி அடையவும் யந்திரம் வழங்குகிறோம். வளர்பிறையில் பூசைசெய்து பூரணையன்று கொடுக்கப்படும். சாதகத்துடன் நேரில் வரவும். பலன் பெறாவிடில் பணம் திருப்பித் தரப்படும். ஸ்ரீ சக்தி கணேஷ உபாசகர், ஸ்ரீமாவை விநாயகர் சோதிடர் நிலையம், 146 பருத்தித்துறை வீதி, நல்லூர். (18297)

## மனையியல் செய்முறைப் பரீட்சை

கொழும்பு, அக் 3

இவ்வருடம் ஜி சி ஈ உயர்தரப் பரீட்சைக்கான மனையியல் செய்முறைப் பரீட்சை இம்மாத முற்குதியில் கொழும்பு கண்டி, காலி, அனுராதபுரம், பண்டாரவளை ஆகிய இடங்களிலுள்ள பரீட்சை நிலையங்களில் நடைபெறும்.

செய்முறைப் பரீட்சைகள் முடிவுற்றதும், பரீட்சை முடிவுகளை நவம்பர் மத்தியில் வெளியிட பரீட்சை இலாகா எண்ணியுள்ளது என்று மேலதிக பரீட்சை ஆணையாளர் திரு ரஸல் சேனாரத்னா தெரிவித்தார். (த)

## நவீல்ட் புதிய அதிபர்

யாழ்ப்பாணம், அக் 3

கைதடி நவீல்ட் பாடசாலையின் அதிபராக திருமதி சந்திர விக்ரர், பிரஸ்தப பாடசாலையின் ஆளுநர் சபையினால் நியமிக்கப்பட்டுள்ளார். திரு. டேவி ஓய்வு பெற்றதை அடுத்து அதிபர் தவிசில் வெற்றிடம் ஏற்பட்டிருந்தது (இ)


## யாழ்ப்பாண மாநகரசபை
## பொது அறிவித்தல்

நாற்புற வரியிறுப்பாளர்களின் நலன்கருதி மின்சார நிலைய வளவில் யாழ் மாநகர சபையின் வருமானப் பகுதி உப அலுவலகம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டு 10-9-91 முதல் செயற்பட்டு வருகின்றது.

முற்பகல் 9-00 மணி முதல் நண்பகல் 12 00 மணி வரை இவ் அலுவலகத்தில் பணத்தைச் செலுத்த வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

வரியிறுப்பாளர்கள் செலுத்த வேண்டிய வரிகள், வாடகைகள், மின்சாரக் கட்டணங்கள், உத்தரவுக் கட்டணங்களை உடனுக்குடன் செலுத்தி மாநகர சபை நிர்வாகத்துடன் ஒத்துழைக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன்.

மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
1-10-1991. (சி-0606)


## அந்தியேட்டி அழைப்பு

அமரர்

### இராஜேந்திரம் மகேந்திரநாதன்

அன்னாரின் அந்தியேட்டி சபிண்டீகரணக் கிரியை இன்று வியாழக்கிழமை 3 - 10 - 91 நல்லூர் வடக்கில் உள்ள அவரது இல்லத்தில் மதியம் 12-00 மணிக்கு நடைபெறும். இக் கிரியைகளில் கலந்து கொண்டு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்தனையுடன் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர்கள், நண்பர்களைக் கேட்டுக் கொள்கின்றோம்.

மனைவி, பிள்ளைகள்,
சகோதரர்கள், சகோதரிகள்.

இல. 9, நல்லூர் குறுக்கு வீதி,
யாழ்ப்பாணம். [18304]


அனேகரின் வேண்டுகோளுக்கிணங்க

## அரசாங்க எழுதுனர் சேவை

போட்டிப் பரீட்சைக்கான

### 1 மாத துரித பயிற்சி வகுப்புகள்

[புதிய பிரிவு]

**ஆரம்பம்: 07-10-1991** பி. ப. 2மணி

பாடநெறி: மொழித்தேர்ச்சி - பொதுஉளச்சார்பு

★ விரிவுரைகள் - திங்கள், செவ்வாய், புதன் - பிற்பகல் 2—5
★ அச்சடித்த பாடக்குறிப்புகள்.
★ கட்டணம் ரூபா 250/- (முழுப்பயிற்சிக்கும்)

**ASTAN INSTITUTE,**
101/10, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
(மக்கள் வங்கிக்கு அருகாமையில்)
(சி-0667)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

ஈழத்தில் மலர்வு: 10 — 5 — 1949



இத்தாலியில் உதிர்வு: 3 — 9 — 1991

### அமரர் மாணிக்கம் தங்கரூபன்

எங்கண்ணில் நீரென்றால் இதயமெல்லாம் ஆறாக வெங்குருதி பாயுதிங்கு மாதவமே – எங்குற்றாய்
இத்தாலி மண்ணதிலே எமைப்பிரிந்து மறைந்தனையோ!
சுற்றிழந்து வாடுகிறோம் நாம்!

31 ஆம் நாள் நினைவுக் கிரியைக்கு உற்றார், உறவினர்கள், நண்பர்களை அன்புடன் அழைக்கிறோம்.

–குடும்பத்தினர்.

நுணாவில்,
சாவகச்சேரி. (18299)

## 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

4—10—1991



### திருமதி பி. லோறேன்சியம்மா

இவரின் ஆன்ம இளைப்பாற்றிற்காக வேண்டி இல்லாலை கதிரை மாதா ஆலயத்திலும், யாழ். அருள் ஆச்சிரமத்திலும் 4-10-1991 காலை 6 மணிக்கு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

பிள்ளைகள், உறவினர்கள்.

அருள் எலக்றிக்கல்ஸ்,
110, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம். [18308]

## 16 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு: 05 — 08 — 1917



உதிர்வு: 03 — 10 — 1975

திருமதி

### மேரி கிரிபையம்மா இராஜக்கோன்

அன்பெனும் கோயில்தனை ஆக்குவித்தாய் அம்மா!
அறிவெனும் ஞான ஒளி ஏற்றுவித்தாய் அம்மா!
அஞ்ஞான இருள் அகற்றி அரவணைத்தாய் அம்மா!
ஆறுதல் தர உலகில் ஆருளர் அம்மா!

அன்புப் பிள்ளைகள்.

ஏழாலை வடக்கு, ஏழாலை,
யாழ்ப்பாணம். [18276]

## ஓராண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 30 — 01 — 1964



மறைவு: 03 — 10 — 1990

திருமதி

### விஜயவாணி பிரேம்நாத்

பாசத்தின் திருவுருவே பண்பின் உறைவிடமே
ஆருயிராய் எம்முடன் அணைந்திருந்த மகளே –
சகோதரியே
காலமெல்லாம் இணைந்திருப்பாய் என –
எனி புடனே நாமிருக்க - நீயோ
காத்திராத வேளைதனில் காலனின் பின் -
சென்றனையோ
காலமது வேகமாய் நடந்து சென்ற போதிலும்
நெஞ்சினிலே உன் நினைவு நீங்கவில்லையம்மா
வாழுயர்ந்த புகழுடனே வானடைந்த செல்வமே!
வாழ்த்துகிறோம் அரனடியில் வாழ்ந்திடுக என்றே.

– குடும்பத்தினர்.

லக்ஷ்மி பவனம்',
70 அத்தியடி புதிய வீதி,
யாழ்ப்பாணம். [18295]

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



மலர்வு: 18 — 09 — 1936

உதிர்வு: 03 — 09 — 1991

திருமதி

### சிவபாக்கியம் இராசரத்தினம்

கண்ணீரில் – எங்களை கதறவிட்டு
தன்னந்தனியே – எங்களைத் தவிக்கவிட்டு
ஏனம்மா எங்களை விட்டு ஓடினீர்கள்
அம்மாவின் ஆத்மா சாந்தியடைவதாக!

இன்று நடைபெறும் அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகளில் கலந்து கொள்ளுமாறு உறவினர்களையும், நண்பர்களையும் அழைக்கின்றோம்.

– குடும்பத்தினர்.

கோண்டாவில் றோட்,
கோப்பாய் தெற்கு,
கோப்பாய். [18275]

## நன்றி நவிலலும் அந்தியேட்டி அழைப்பும்



அமரர் **சி. தம்பிப்பிள்ளை** — திருமதி **ப. தம்பிப்பிள்ளை**

இறைபதம் எய்திய எங்கள் அன்னை தந்தையரின் இறுதிக் கிரியைகளில் பங்கு கொண்டோருக்கும், அனுதாபம் தெரிவித்து ஆறுதல் அளித்தோருக்கும், பல்வகை வழிகளிலும் உதவிகள் நல்கிய அனைவருக்கும் எமது மனப்பூர்வமான நன்றிகளைத் தெரிவிக்கின்றோம். 04 - 10 - 1991 வெள்ளிக்கிழமை நண்பகல் நிகழும் அந்தியேட்டிக் கிரியைகளில் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

– பிள்ளைகள்.

துர்க்கை அம்மன் கோவிலடி,
தெல்லிப்பளை. [18306]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## மாறும் வடிவம்

கொழும்பில் கடந்த ஆகஸ்ட் மாதப் பிற்பகுதியில் உருவாகிய அரசமைப்புப் போர் இப்போது தமிழர் விரோதப் பிரசாரமாக வடிவம் மாறியுள்ளது!

ஜனாதிபதி பிரேமதாசாவுக்கு எதிராக அரசியல் குற்றப் பிரேரணை ஒன்று சபாநாயகரிடம் சமர்ப்பிக்கப்பட்டதோடு இப்போதைய தெற்குப் போர் ஆரம்பமானது.

அந்தக் குற்றப் பிரேரணையைத் தொடர்ந்து, சங்கிலித் தொடராகப் பல அரசியல் நிகழ்வுகள் நடந்து கொண்டிருக்கின்றன. நாடாளுமன்றக் கூட்டத் தொடர் ஒத்தி வைக்கப்பட்டது. அரசுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வரப்பட்டது. ஜனாதிபதி விடுதலைப் புலிகளுக்கு ஆயுதம் வழங்கியதாகப் பகிரங்கப் படுத்தப்பட்டது.

இப்படிப் பலவாக கிளைவிட்டு, இப்போது, ஈரோஸ் சார்பில் யாழ்ப்பாண மாவட்ட எம். பிக்கள் மீண்டும் நாடாளுமன்றம் செல்லும் விவகாரம் ஏந்தப்பட்டுள்ளது. அதனைக் கையில் பிடித்துக் கொண்டு தொங்குகிறார்கள், தென்னிலங்கை அரசியல் வாதிகள்!

ஈரோஸ் எம். பிக்கள் நாடாளுமன்றம் செல்லவிருப்பது பல பிரச்சினைகளுக்கு வழிவகுக்கும் என்று எதிர்க்கட்சித் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்கா "முன்னெச்சரிக்கை" விடுத்திருக்கிறார்!

ஈரோஸ் எம். பிக்கள் நாடாளுமன்றம் வந்தால் ஆபத்து வரும்; நாட்டிற்கு ஆபத்தாக முடியும்; அவர்கள் வருவதைப் பிற எம். பிக்கள் எதிர்க்க வேண்டும்; என்றவாறாக சிங்கள மகாஜன பெரமுன போன்ற சிங்களத் தீவிரவாத அமைப்புகளும், பௌத்த குருமாரும் பிரசாரம் செய்யத் தொடங்கி விட்டனர்.

இத்தனைக்கும் ஈரோஸ் எம். பிக்கள் தேர்தல் சட்டங்களுக்கு இணங்க, முன் கதவாலேயே செல்ல ஏற்பாடாகி இருக்கிறது. பின் கதவால் சட்டவிரோதமாகச் செல்வதற்கு அவர்கள் முனையவில்லை.

தமிழர்கள் தங்கள் உரிமைகளை நாடாளுமன்ற சனநாயகத்துக்கு உட்பட்டு நின்று கேட்க வேண்டும். ஆயுதப் போராட்டத்தை ஏன் கைக்கொள்ள வேண்டும் — என்றெல்லாம் கேட்டவர்கள், இப்போது வடக்கின் பிரதிநிதிகள் நாடாளுமன்ற சனநாயக ஒழுங்கு நெறிகளுக்கு ஏற்ப சபைக்குச் செல்ல எத்தனிக்கும் போது, அதனை வேறு விதமாக அணுகுகிறார்கள். தடுக்கப் பார்க்கிறார்கள்.

அதனைச் சாட்டாக வைத்து தமிழர் விரோத உணர்வு என்னும் தீயை மூட்ட முனைகிறார்கள். மீண்டும் ஒரு கறுப்பு ஜூலை'யை உருவாக்கி தங்கள் அரசமைப்புப் போரையே அமுக்கிவிடுவரோ என்று அஞ்சும் அளவுக்குத் தீவிரமடைகிறார்கள். இத்தனை பேரழிவுகளுக்குப் பின்னரும் இனத்துவேஷம் மாறவில்லை!

சனநாயகம் பேசியவர்கள் நாடாளுமன்றத்தின் அதிகாரத்தைக் கூட்டுமாறு கேட்பவர்கள். சனநாயக வரன்முறைகளுக்கு உட்பட்டு நாடாளுமன்றம் செல்லும் யாழ். மாவட்ட எம். பிக்களைத் தடுக்க முயற்சிக்கிறார்கள்.

இதன் அர்த்தம் தான் என்ன? தமிழர்கள் அரசியல் அதிகாரம் செய்யத் தகுதியற்றவர்கள் என்று கருதுகிறார்களா அல்லது தமிழ் மக்கள் ஸ்ரீலங்காவின் பிரஜைகள் அல்லர் என்று தாமே உறுதிசெய்யத் துடிக்கிறார்களா?

---

### ஆசிரியர் தினம் - கலைநிகழ்ச்சிகள்

# சமகால நிகழ்வுகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கவும்

## பணிப்பாளர் வேண்டுகோள்

உலக ஆசிரியர் தினத்தை முன்னிட்டு ஆசிரியர்களால் நடத்தப்படும் கலை நிகழ்ச்சிகள் அனைத்தும் சமகால நிகழ்வுகளைப் பிரதிபலிப்பனவாக அமைவது நல்லது.

இவ்வாறு யாழ். பிரதேச கல்விப்பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் ஆசிரியர்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஆசிரியர் தினம் தொடர்பாக பாடசாலை மட்டத்திலும் கோட்ட, கொத்தணி மட்டத்திலும் ஆசிரியர் பங்கு கொள்ளும் கலை நிகழ்ச்சிகள் அடுத்த சில தினங்களில் நடைபெறவுள்ளன.

அதனை முன்னிட்டே கல்விப்பணிப்பாளர் மேற்படி வேண்டுகோளை விடுத்துள்ளார்.

இதேவேளை, இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் ஏற்பாடு செய்துள்ள ஆசிரியர் தின விழாவை முன்னிட்டு அதில் கலந்து கொள்ளுமுகமாக சகல ஆசிரியர்களுக்கும் நாளை அரைநாள் லீவு வழங்கப்படும் என்றும் கல்விப்பணிப்பாளர் தெரிவித்தார். (அ-5)

# தொழில் நுட்பக் கல்லூரியில் சேர விண்ணப்பிக்கலாம்

## 15 ஆம் திகதி கடைசி நாள்

யாழ்ப்பாணம், அக். 3

தொழில் நுட்பக் கல்லூரிகளில் 1992 ஆம் ஆண்டு நடத்தப்படும் தேசிய கைப்பணி [தொழில்கள்] தராதரப்பத்திரப் பயிற்சி நெறி, உயர் தேசிய டிப்ளோமா, தேசிய டிப்ளோமா, உயர் தொழில் மற்றும் தேசிய சான்றிதழ் போன்ற பயிற்சிநெறிகளுக்கான விண்ணப்பங்களை உயர் கல்வி அமைச்சின் தொழில் நுட்பக் கல்விக் கிளை கோரியுள்ளது.

மேற்படி பயிற்சிநெறிகளுக்கு விண்ணப்பிக்கத் தகுதியுடையோர் எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னதாக அனுமதி கோரும் தொழில் நுட்பக் கல்லூரியின் அதிபருக்கு தாமாகவே தயாரித்த விண்ணப்பங்களை பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கலாம்.

இது சம்பந்தமான தகவல்கள் செப்டெம்பர் 13 ஆம் திகதிய அரச வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளன.

மேற்படி பயிற்சி நெறிகளின் இயல்பு, ஒவ்வொரு பயிற்சி நெறி தொடர்பான கல்வித் தகைமைகள், அவை நடத்தப்படும் தொழில் நுட்பக் கல்லூரியின் இடங்கள், போதனா மொழி போன்ற விவரங்களும்—

மாதிரி விண்ணப்பப் படிவமும் அந்த வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் தொழில் நுட்பக் கல்லூரியில் அடுத்த வருடம் பேதிக்கப்படவுள்ள பயிற்சி நெறிகள் வருமாறு:-

பொருத்துதல், தன்னியக்கப் பொறியியல், வானொலி மற்றும் இலத்திரனியல், மின் கம்பி இணைத்தல், வானொலி சேர்காப்பு, இறாக்ரர் பொறிவலர், மோட்டார் வாகன மின் வேலை, நீர்ப் பம்பு பழுது பார்த்தல்; மற்றும்—

வியாபாரக் கற்கைகளில் தேசிய டிப்ளோமா, கணக்கீட்டு தொழில் நுட்பவியலாளருக்கான தேசிய தராதரப் பத்திரம், வியாபாரக் கற்கைகளில் தேசிய தராதரப் பத்திரம், கணக்கீட்டு தொழில் நுட்பவியலாளருக்கான தேசிய தராதரப் பத்திரம், சுருக்கெழுத்தாளர் தராதரப் பத்திரம், தேசிய தொழில் நுட்பவியலாளர் தராதரப் பத்திரம்— [மின்சாரமும் இலத்திரனியலும், பொறியியல், கணிய அளவீடு] பயில்நிலை வரைஞருக்கான தேசிய தராதரப் பத்திரம், ஆங்கிலத்தில் தேசிய டிப்ளோமா, வர்த்தகம் கைத்தொழில் மற்றும் தொடரும் கல்விக்கான ஆங்கிலத்தில் தேசிய தராதரப் பத்திரம் ஆகியன.

[வர்த்தமானியில் வெளிவந்த விவரங்களை உதயன் பணிமனையில் பார்வையிடலாம்] [அ-5]

### கூட்டம்

பனை, தென்னை வள அபிவிருத்தி ஒன்றியம் தமிழீழத்தின் பொருளாதார வளர்ச்சி கருதியும், நல்ல கருத்துக்களையும், விளக்கங்களையும் வெளிக்கொணரவும் பனை, தென்னை வளங்களின் அபிவிருத்திகளை உள்ளடக்கிய மலர் ஒன்றை வெளியிடவுள்ளது.

இது தொடர்பான ஆலோசனைக் கூட்டம் ஒன்று நாளை வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு பனை, தென்னை வள அபிவிருத்தி ஒன்றியத்தின் அலுவலகத்தில் நடைபெறும். (த)

### பொன்னாலைப்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பொன்னாலை வயல் பகுதிகளிலும், மூளாய் தெற்கு ஐயனார் கோவிலடிப் பகுதி வயல்களிலும் மற்றும் குடியிருப்புப் பகுதிகளிலும் ஷெல்கள் விழுந்து வெடித்தன.

ஷெல் வீச்சு ஆரம்பித்ததைத் அடுத்து மக்கள் பாதுகாப்பான இடங்களை நோக்கிச் சென்று விட்டதால், உயிரிழப்புகள் தவிர்க்கப்பட்டன.

நேற்றுப் பகல் 11 மணியளவிலும் பொன்னாலைப் பகுதியை நோக்கி இரு ஷெல்கள் ஏவிவிடப்பட்டன. [ஓ-28-15]

### புங்குடுதீவை...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

படுகிறது.

இரவு பதினொரு மணி முதல் ஒன்றரை மணிவரை தொடர்ந்து ஷெல்கள் விழுந்து வெடித்துக் கொண்டிருந்தன என்றும் தெரிவிக்கப்படுகிறது.

பெரும்பாலான ஷெல்கள் குறிகட்டுவான் பகுதியிலும் 4 ஆம், 5 ஆம் வட்டாரங்களிலுமே விழுந்து வெடித்தன. மற்றும் சிறுப்பிட்டி வீரப்புளியடி, சந்தசுவாமி கோவிலடி ஆகிய இடங்களிலும் ஷெல்கள் விழுந்தன.

பெரும்பாலான ஷெல்கள் கடற்கரைப் பகுதிகளிலும் குடிமனைகள் குறைந்த இடங்களிலும் விழுந்ததால், உயிர்ச்சேதம் ஏற்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

அதே சமயம் செவ்வாய் இரவு வேலணை. தம்பாட்டி கடற்குதியில் மீன் பிடித்துக் கொண்டிருந்த குருநகர் மீனவர் ஒருவர் படையினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு ஆளானார் என்றும் தெரிவிக்கப்படுகிறது. [இ-15 131]

### சர்வதேச நல்லொழுக்க தின விழா

யாழ்ப்பாணம், அக். 3

வட பிரதேச நல்லொழுக்க சம்மேளனத்தினர் நடத்தும், சர்வதேச நல்லொழுக்க தின விழா இன்று பிற்பகல் 1-30 மணிக்கு தொல்புரம் கலைவாணி நல்லொழுக்க சங்க கலை அரங்கில் நடைபெறும். [த]

### விண்ணபித்தவர்கள் எண்ணிக்கை குறைவு

குவைத்திலிருந்து நாடு திரும்பியவர்களில் ஆயிரத்துக்கும் குறைந்தோரே இதுவரை யாழ். செயலகத்தில் நிவாரணம் கோரி விண்ணப்பங்களை சமர்ப்பித்துள்ளனர்.

குவைத்திலிருந்து பாதிக்கப்பட்டு நாடு திரும்பியவர்களில் யாழ். மாவட்டத்தில் மட்டும் 6 ஆயிரம் பேருக்கு மேல் உள்ளனர் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. (த-5)

### இரகசியமான...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

வரை அடக்க இராணுவம் அனுப்பப்பட்டது.

அச்சமயம் இந்திய அமைதிப் படையினரால் அமைக்கப்பட்ட தமிழ்த் தேசிய இராணுவம் சிங்களக் கிராமங்களைத் தாக்கி வந்தது.

இதற்கெதிராக நடவடிக்கைகளை எடுக்கும்படி எதிர்க்கட்சிகள் கூட அரசைக் கோரி வந்தன. அதன் காரணமாகத்தான் விடுதலைப் புலிகளுக்கு அரசு ஆயுதங்களைக் கொடுத்தது.— என்றார். (உ-எ)

### அரசுப்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

வைப் பார்த்துக் கொண்டிருந்தால். போதும் இலங்கை விஷயத்தில் இந்தியா தலையிடக் கூடாது" — இப்படி 'டெய்லி ஒப்சேர்வர்' இந்திய பிரதமரைக் கடுமையாகக் குறை கூறியிருக்கிறது.

ஸ்ரீலங்கா அரசின் கருத்தையே இப்பத்திரிகை பிரதிபலிப்பதாக கருதப்படுகிறது. (உ-எ)

### ஈரோஸ்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

இப்படிச் சொன்னார் அவர் அங்கு மேலும் கூறியதாவது:-

தமிழ்ப் போராளிகளால் தலைநகரில் வன்முறை வெடிக்கலாம் என்பதோடு எமது குழுவுக்கும் மக்களுக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

ஈரோஸ் இயக்கத்தின் பேரால் விடுதலைப் புலிகளின் தளபதிகளே உறுப்பினர்களாக நாடாளுமன்றம் வருகின்றனர்.

இந்த ஈரோஸ் எம். பிக்களில் ஒருவர் கொண்டவில் பகுதி விடுதலைப் புலிகள் இயக்கத் தளபதி. மற்றொருவர் லண்டனில் விடுதலைப் புலிகள் பிரதிநிதியாகப் பதவி வகித்தவர்.

அரசினால் சிறைபிடிக்கப்பட்ட போராளிகளை விடுதலை செய்யவும் அரசு பேரம் பேசிக்கொண்டிருக்கிறது.

எனக்கு எதிராகவும் அரசின் கொலைப்படை சுற்றி வருகிறது.

இப்படி திரு. அத்துலத்முதலி சொன்னார். (உ-எ)

### அரசகட்ற்..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

ரோந்து சென்ற இரு கடற்படை படகுகள் மீது மூன்று முனைகளில் இருந்து விடுதலைப் புலிகள் தாக்கினர் என்று உத்தியோகபூர்வ வட்டாரங்களை ஆதாரம் காட்டி "லங்கா புவத்" தெரிவித்தது. [உ-5]

---

# தமிழ் நாட்டில் புலிகள் 2 ஆம் கட்ட நடவடிக்கையில்

## பாரதிய ஜனதா கூறுகிறது

சென்னை, அக். 3

தமிழ்நாட்டில் புலிகளின் திட்டங்கள் இரண்டாவது கட்டத்தை அடைந்திருக்கின்றன.

இவ்வாறு இந்தியாவின் பாரதிய ஜனதாக கட்சி தெரிவித்துள்ளது.

அஸாம் ஐக்கிய விடுதலை முன்னணியுடன் மட்டுமன்றி, ஆந்திரப் பிரதேசத்திலுள்ள நக்ஸலைட்டுகளுடனும் புலிகள் தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டுள்ளனர்.

மூன்றாவது கட்ட நடவடிக்கையாக பிரிவினைவாத இயக்கங்களுக்குத் தூபம் இடுவதன் மூலம், அஸாமில் அல்லது பஞ்சாப்பில் உள்ளது போன்ற, சூழ்நிலையை புலிகள் தமிழ்நாட்டில் உருவாக்குவர் என்று அந்தக் கட்சி எச்சரிக்கை செய்துள்ளது.

### அவர்கள் பணி அவர்களுக்குத் தெரியும்

# படையினர் விருப்பப்படி நடக்க அனுமதிக்கவேண்டும்

## ஜனாதிபதி பிரேமா கூறுகிறார்

கொழும்பு, அக்.3

கொழும்பிலிருந்துகொண்டு பாதுகாப்புப்படையினருக்கு இப்படித்தான் நடக்க வேண்டும் என்று நாம் கூற முடியாது. அவர்களின் பணி அவர்களுக்குத் தெரியும். அதனைச் செய்ய அவர்களை நாம் அனுமதிக்க வேண்டும்.

கொழும்பு நவரங்கஹல வில் கடந்த சனிக்கிழமை இடம் பெற்ற பெற்றோலியக் கூட்டுத்தாபன நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டு பேசிய ஜனாதிபதி பிரேமதாசா இவ்வாறு தெரிவித்தார்.

நாடு எரிந்து கொண்டிருந்தபோது நான் ஜனாதிபதியாகப் பதவியேற்றேன். அமைதி, சகஜ நிலையை ஏற்படுத்துவது முடியாத காரியம் எனப் பலரும் எண்ணினர்.

ஆனால் மக்களின் ஒத்துழைப்புடன் ஜே. வி. பி. நடவடிக்கைகள் ஒழிக்கப்பட்டன. இதற்கான பெருமையை நான் எடுக்கவில்லை என்றும் அவர் அங்கு கூறினார். (த-எ)

### மக்கள் சொந்த இடங்களுக்கு திரும்புகிறார்கள்

யாழ்ப்பாணம், அக்: 3

மணலாறு மாவட்டத்தில் கடந்த மாதம் இடம்பெற்ற சண்டையின் போது மணலாறு, செம்மலை, அலம்பில் ஆகிய பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்த மக்கள் மீண்டும் தமது இருப்பிடங்களுக்குச் செல்ல ஆரம்பித்துள்ளனர்.

இதனைத் தொடர்ந்து அப்பகுதி பலநோக்குக் கூட்டுறவுச் சங்க கிளைகள் திறந்து மக்களுக்குப் பொருள்களை விநியோகிக்கத் தொடங்கியுள்ளன. (த-15)

### பாடசாலைகளில் கல்வி கற்பிக்கும்

# பயிற்சி பெறாத ஆசிரியருக்கு பயிற்சி அளிக்க ஏற்பாடு

பாடசாலைகளில் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் மட்டுமே கடமையாற்றுவதை உறுதிப்படுத்த, பயிற்சி பெறாத ஆசிரியர்கள் அனைவருக்கும் பயிற்சியளிக்கப்படும்.

ஜனாதிபதியின் ஆலோசனையின் பேரில் இதற்கென இந்த ஆண்டு ஜனவரி மாதம் முதல் பயிற்சித் திட்டம் ஒன்று மேற்கொள்ளப்படுகிறது.

பாடசாலையில் தற்போது பயிற்சி பெறாமல் போதிக்கும் ஆசிரியர்களுக்கு, உடனடியாக ஆசிரியர் தகுதிக்குரிய பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது இந்தப் பயிற்சித் திட்டத்தில் 32ஆயிரம் ஆசிரியர்களை சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளனர்.

இந்த ஆண்டு ஜூலை மாதம் 25ஆம் திகதி வர்த்தமானியில் வெளியான அறிவித்தல் மூலம், பயிற்சிக்காக இம் மாதம் வரை பயிற்சி பெறாத ஆசிரியர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் பெறப்படுகின்றன.

சேவையிலுள்ள பட்டதாரி ஆசிரியர்கள் தவிர்ந்த ஏனைய பயிற்சி பெறாத ஆசிரியர்களும், தொலைக்கல்வித் திட்டத்தின் அடிப்படையில் பயிற்சிகளுக்கு விண்ணப்பிக்கலாம்.

இவற்றுடன் விளையாட்டு, உடற்கல்வி போன்ற துறைகளில் ஈடுபட்டுள்ள ஆசிரியர்களும் தொழில் கல்விப் பயிற்சித் திட்டங்களுக்கு விண்ணப்பிக்கலாம். இது சம்பந்தமான அறிவித்தல் செப்டம்பர் மாதம் வெளியான 6ஆம் திகதி வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

இப் பயிற்சி வகுப்புகளுக்கான விண்ணப்பங்கள் இம் மாதம் 31ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பப்படல் வேண்டும் என்று அறிவிக்கப்படுகிறது. (த)

# யாழ். மாவட்டத்தில் வீட்டுத் தோட்டப் போட்டி

யாழ்ப்பாணம், அக்.3

யாழ். மாவட்டத்தில் விரைவில் வீட்டுத் தோட்டப் போட்டி ஒன்றினை நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

யாழ் செயலகத்தில் நேற்று முன்தினம் நடந்த உணவு உற்பத்திக் கூட்டத்தில் இது பற்றிய கலந்துரையாடல் இடம்பெற்றதாக யாழ். அரச அதிபர் தெரிவித்தார்.

கிராம உற்பத்திக் குழுக்கள் மட்டத்தில் ஆரம்பிக்கப்படும் மேற்படி வீட்டுத் தோட்டப் போட்டி பின்னர் உதவி அரசாங்க அதிபர் பிரிவு மட்டத்திலும், மாவட்ட மட்டத்திலும் நடத்தப்படும்.

இது தொடர்பான அறிவுறுத்தல்கள் விரைவில் வெளியிடப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. [த-5]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்தமிழர் உட்பட நான்கு பேர் தமிழகத்தில் கைது!

சென்னை, அக். 3

தமிழகத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை மேற்கொள்ளப்பட்ட இரண்டு வெவ்வேறு நடவடிக்கைகளில் ஓர் இலங்கைத் தமிழர் உட்பட நான்கு பேரை பொலீஸார் கைது செய்தனர்.

அவர்களிடமிருந்து சுமார் 2 ஆயிரம் ஜெலட்டின் குச்சிகள், ஆயிரம் மின்சார டெற்றனேற்றர்கள், ஆயிரம் சாதாரண டெற்றனேற்றர்கள், ஏ. கே. 47 ரக துப்பாக்கிகளில் பயன்படுத்தப்படும் பத்து ரவைகள் முதலியன கைப்பற்றப்பட்டன என்று தெரிவிக்கப்படுகிறது.

# அந்தியேட்டி அழைப்பு





**வல்லிபுரம் நடராஜா**
தோற்றம்: 11 - 10 - 1919
மறைவு: 13 - 06 - 1991

**நடராஜா வரதராஜா**
தோற்றம்: 22 - 12 - 1959
மறைவு: 03 - 07 - 1991

எமது குடும்பத்தலைவன் திரு வா. வ. நடராஜா அவர்களினதும் அன்னாரின் இளமகன் செல்வன் வரதராஜா அவர்களினதும் அந்தியேட்டி இன்று [3 - 10 - 91] ''சாமியன் அரசடி'' சரவெட்டியில் இருக்கின்ற எமது இல்லத்தில் நடைபெறும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகின்றோம்.

''இலக்குமி வாசா'',
சாமியன் அரசடி, கரவெட்டி.

-குடும்பத்தினர்

(C/0611)

# குடிதண்ணீர் இல்லை: ஆசிரியர் கலாசாலை மூடப்பட்டது

மட்டக்களப்பு, அக். 3

மட்டக்களப்பு அரசினர் ஆசிரியர் கலாசாலை நேற்று முன்தினம் காலை 10 மணியுடன் மறு அறிவித்தல் வரை காலவரையறையின்றி மூடப்பட்டுள்ளது.

குடிநீர்த் தட்டுப்பாடே இதற்குக் காரணம் என்று அறிவிக்கப்படுகிறது. (த)

## வடக்கே மண்எண்ணெய்

கொழும்பு, அக். 3

வடபகுதியிலுள்ள உத்தரவு பெற்ற மண்எண்ணெய் வியாபாரிகள் தேவையான அளவு மண்எண்ணெய்யை கொண்டு செல்லலாம் என்று கொழும்புப் பத்திரிகைச் செய்திகள் தெரிவிக்கின்றன.

பாதுகாப்பு அமைச்சு இதற்கான அனுமதியை வழங்கி வருகிறதாம். (த)

## 70 ஈழ அகதிகள் திடீர் மாற்றம்

மண்டபம் முகாமில் தங்கியிருந்த 70 இலங்கைத் தமிழ் அகதிகள் வேலூரில் உள்ள சிறப்பு முகாமுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

முகாமில் உள்ள ஏனைய அகதிகளோடு விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த ஆதரவாளர்கள் கலந்து விட்டனர் என்ற தகவலை அடுத்து இந்த 70 பேரும் வேலூருக்கு அனுப்பி வைக்கப்பட்டனர் என்று அதிகாரபூர்வ செய்திகள் தெரிவித்தன.

# அமெ. ஜனாதிபதி தேர்தலில் கம்யூனிஸ்ட் வேட்பாளர்!

வாஷிங்டன், அக். 3

1994 இல் நடைபெற உள்ள அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் முதற்தடவையாக வேட்பாளர் ஒருவரை நிறுத்தப் போவதாக அமெரிக்க கம்யூனிஸ்ட் கட்சி அறிவித்துள்ளது.

பொப்ரெக்ஷின் என்ற தொழிற்சங்கப் பிரமுகரே கம்யூனிஸ்ட் கட்சி சார்பாகப் போட்டியிடுவார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. [இ]

# சோவியத் இராணுவ எண்ணிக்கை: பாதியாகக் குறைக்க முடிவு

மாஸ்கோ, அக். 3

சோவியத் இராணுவத்தின் எண்ணிக்கை பாதியாகக் குறைக்கப்படும் என்று சோவியத் அதிபர் திரு. மிக்கெய்ல் கோர்பசேவ் அறிவித்துள்ளார்.

ரஷ்ய நாடாளுமன்றின் இரண்டு கமிட்டிகளின் உறுப்பினர்களிடையே பேசிய அவர் 40 லட்சம் படைவீரர் கொண்ட சோவியத் இராணுவம், அடுத்த மூன்று ஆண்டுகளில் 25 லட்சமாகக் குறைக்கப்படும் என்று சொன்னார்.

மத்திய கட்டுப்பாட்டின் கீழ் கூட்டு இராணுவப்படைகளை உருவாக்குவதற்கு இப்போது நடக்கும் இராணுவ சீர்திருத்தங்களில் உயர் முன்னுரிமை அளிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (த)

## விவரம் சேகரிப்பு

யாழ்ப்பாணம், அக். 3

சிறுவர் பராமரிப்பு இல்லங்களை நடத்திவரும் ஸ்தாபனங்களின் விவரங்களை சேகரிக்கும் பணி ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது

வண்ணை சிவலிங்க வைத்தீசுவரர் கோவில் ஆலயபரிபாலன சபையினர் இந்த முயற்சியில் இப்போது ஈடுபட்டுள்ளனர். [அ-5]

# வெளிவந்துவிட்டன!

போதகர் மேவின் குணசெல்வம் எழுதிய
**"பாவம் அந்த அப்பிள் பழங்கள்"**
பரிசுத்த வேதாகமத்தை ஆதாரமாகக் கொண்டு எழுதப்பட்ட சிறந்த கிறிஸ்தவ ஆவிக்குரிய புஸ்தகம்:
வாங்கி வாசித்து பயனடையுங்கள்:

**"எக்காளத்தொனி கீதங்கள்"**
ஆவிக்குரிய கிறிஸ்தவ கீதங்கள் அடங்கிய ஒலிப்பதிவு நாடா. முற்றிலும் புதிய பாடல்கள். புதிய இராகங்கள்.

பெற்றுக் கொள்ளும் இடங்கள்:-

C. L. S. புத்தகசாலை,
இல. 570, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

எக்காளத்தொனி பூரண சுவிசேஷ சபை,
இல. 21, கச்சேரி - நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.

(18310)

# மரண அறிவித்தல்கள்

## வல்லிபுரம் வீரகத்தி

[இளைப்பாறிய ஆசிரியர், நெல்லியடி ம. ம வித்தியாலயம்)

கரவெட்டி மேற்கைச் சேர்ந்த வல்லிபுரம் வீரகத்தி 30-09-1991 இல் காலமானார். இவர் தெய்வானையின் [ஓய்வுபெற்ற அதிபர்] அன்புக் கணவரும், வைத்திய கலாநிதி சத்தியானந்தவல்லி (லண்டன்], கலாநிதி சுந்தரராஜன் [கனடா), திரு. சிவபாலன் (லண்டன்] ஆகியோரின் அன்புத் தந்தையும், வைத்தியகலாநிதி தில்லை நடராஜா (லண்டன்), திருமதி க. சமலினி [கனடா), திருமதி இ. மோகனவினோதா (லண்டன்] ஆகியோரின் அன்பு மாமனாரும், திரு மோகனகுமார் [யாழ். பல்கலைக்கழக 1 ஆம் வருட விஞ்ஞானபீட மாணவன்), ஆம்பிகேயன் [லண்டன்), அரவிந் [லண்டன்], உமாவேணி (கனடா], கலாவாணி [கனடா], அபயன் (கனடா) ஆகியோரின் அன்புப் பேரனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 30-09-1991 இல் நடைபெற்றன இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பி. மோகனகுமார்.

கரவெட்டி மேற்கு.
கரவெட்டி.

(18305)

## திருமதி நாகம்மா காசிலிங்கம்

பலாலி - கேற்றுவவாலியைச் வசிப்பிடமாகிய திருமதி நாகம்மா காசிலிங்கம் 2-10-91 இல் [புதன்கிழமை] காலமானார்.

இவர் முன்னாள் இ. போ. ச. பஸ் சாரதி [கோண்டாவில்] பூதப்பிள்ளை காசிலிங்கத்தின் அன்பு மனைவியும், சிவயோகநாதன் [பிரான்ஸ்], சிறிரங்கநாயகி, சிவயோகநாயகி ஆகியோரின் அன்புத் தாயாரும், கௌசலா [பிரான்ஸ்], வடிவேல்நாதன் [இலங்கை வங்கி, யாழ்ப்பாணம்] ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று [வியாழன்] பி. ப. 2 மணியளவில் மட்டுவில் வடக்கு சாந்தநாயகி பாடசாலை வீதியில் அமைந்துள்ள சாம்பசிவ குருக்களின் இல்லத்தில் நடைபெறும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

தகவல்;
க. வடிவேல்நாதன்
மருமகன்

[18101]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 03 - 10 - 1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## யாழ்ப்பாணம் ப. நோ. கூ. சங்கம் - வரையறுக்கப்பட்டது

களஞ்சியத் தொழிலாளர்

# தேவை

விண்ணப்பங்களுக்கு:
291, ஸ்ரான்லி வீதியிலுள்ள யாழ். ப. நோ. கூ. சங்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

- பொது முகாமையாளர்.

01 - 10 - 1991. (சி-0605)

# சபிண்டிக்கிரியை அழைப்பு



தோற்றம்: 18 ... 1917
மறைவு: 04 ... 09 ... 1991

திருமதி
**நாகம்மா செல்வரத்தினம்**
(இளைப்பாறிய ஆசிரியை, அச்சுவேலி மகாவித்தியாலயம்)

04 - 09 - 91 புதன்கிழமை சிவபதம் அடைந்த எமது குடும்பத் தலைவி திருமதி நாகம்மா செல்வரத்தினம் அவர்களின் சபிண்டிக் கிரியைகள் 04 - 10-91 வெள்ளிக்கிழமை காலை 10 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அன்று நடைபெறும் சபிண்டீகரணக் கிரியைகளிலும், பொன்மலர் வெளியீட்டிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர்கள், நண்பர்களை அன்புடன் வேண்டுகின்றோம்.

கணவர் - வே. செல்வரத்தினம்,
[இளைப்பாறிய பொலீஸ் உத்தியோகத்தர்]
குடும்பத்தினர்.

''செல்வ மகால்'',
பத்தமேனி, அச்சுவேலி.

(18298)

# இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம்

நடத்தும்

# சர்வதேச ஆசிரியர் தின விழா

**காலை நிகழ்ச்சி**
இடம்: யா / வைத்தீஸ்வராக் கல்லூரி
காலம்: 04 . 10 . 1991 காலை 11 மணி

**மாலை நிகழ்ச்சி**
இடம்: கைலாசபதி அரங்கு,
யாழ். பல்கலைக்கழகம்
காலம்: 04 . 10 . 1991 மாலை 4.30 மணி

கல்வி அலுவலர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், இளைப்பாறிய சங்க நிர்வாகிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்,

தலைமைப் பணியகம்,
இலங்கைத் தமிழர்
ஆசிரியர் சங்கம்,
442, பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

த. மகாசிவம்
பொதுச் செயலாளர்

(C / 0612)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org